1986 நவம்பர் 24]

வேண்டுகோளை ஏற்று உடனடியாக ஆய்குடியிலே ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு உத்தர விடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு மருத்துவர்கள் இல்லையோ அங்கெல்லாம் மருத்துவர்களை நியமிக்க ஆணை பிறப்பித் தாகிவிட்டது.

முகையூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை.

155—(*வினா எண். 10085) திரு. மு. சந்திரசேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம்—முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணலூர்பேட்டை பேரூராட்சி எல்லையில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

தமிழ்நாடு இந்து கோயில்களின் ஆண்டு வருமானம்.

156—(*வினா எண். 1257) திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலுமுள்ள இந்து கோயில் சொத்துக் களில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் மொத்த ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அப்பணம் எதற்கெதற்கெல்லாம் செலவழிக்கப் படுகிறது?

(இ) ஒவ்வொரு செலவினத்தின் மீதும் செலவழிக்கப்படும் பணத்தின் விழுக்காடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயில்களிலிருந்து உதவித் தொகை மற்றும் தணிக்கைத் தொகை வகையில் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 1,58,95,219 ஆகும்.